நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சங்ககிரி

முன்னிலை : திருமதி. எஸ்.சத்தியா, பி.ஏ., பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06- ஆம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 34/ 2022**

**(CNR.No. TNSA09-000377-2022)**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | - | அரசு தரப்பில் காவல் ஆய்வாளர்,<br>தேவூர் காவல் நிலையம், கு.எண். 220/2021 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | - | ஆனந்தன், த/பெ. தங்கவேல்<br>47, கோணகழுத்தனூர், காட்டுவளவு மைலம்பட்டி,<br>தேவூர் கிராமம், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம். |
| வனையப்பட்ட குற்றங்கள் | - | U/s. 279, 304(A), 337 of IPC, 181(3) MV Act |
| குற்றம் நிகழ்ந்த நாள் | - | 01.11.2021 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | - | 02.11.2021 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | - | 24.11.2021 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | - | 24.11.2021 (Station bail) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | - | 16.03.2022 |
| எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | - | 14.12.2022 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | - | 23.07.2025 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | - | 26.03.2026 |

| | | |
|---|---|---|
| குவிமுச.பிரிவு.311-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | | Nil |
| குவிமுச.பிரிவு.313(1)(ஆ)-இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | - | 27.03.2026 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விவரம் | - | Nil |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | - | Nil |
| தீர்மானம் | - | எதிரி U/s. 279, 304(A), 337 of IPC, 181(3) MV Act - ன் கீழ் குற்றவாளி இல்லை. |
| முடிவு | - | இறுதியாக, எதிரி மீது சுமத்தப்பட்ட இதச. U/s. 279, 304(A), 337 of IPC, 181(3) MV Act – ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி அரசுதரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை இதச. U/s. 279, 304(A), 337 of IPC, 181(3) MV Act – ஆகிய பிரிவுகளின் படி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1) – ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. வழக்குச்சொத்து இல்லை. |

இந்த வழக்கு 17.03.2022 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும்,

எதிரிக்காக வழக்கறிஞர் திரு.C.மோகன்குமார், திரு.த.எழில்சேரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

**தீர்ப்புரை**

**தேவூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையின் விவரம்:**

2.1) கடந்த 01.11.2021 -ம் தேதி மதியம் 11.45 மணி சுமாருக்கு தேவூர் காவல் நிலைய சரகம் குமாரபாளையம் to எடப்பாடி மெயின் ரோட்டில் புளியம்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் எதிரி TN 52 L 6122 என்ற பதிவெண்கொண்ட Hero splendor இருசக்கர வாகனத்தில் வாதியின் கணவர் பால்ராஜ் (எ) பாலு என்பவரை பின்னால் உட்கார வைத்து கொண்டு குமாரபாளையம் பக்கம் இருந்த எடப்பாடி நோக்கி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வலது புறமாக ஏறி ஓட்டிச்சென்று எதிர் திசையில் வந்த சாட்சி-2 அருணகிரி என்பவர் ஓட்டிவந்த TN 52 F 7732 என்ற பதிவெண்கொண்ட Honda Unicorn இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச. பிரிவு 279 - ன் கீழும்,

2.2) மேற்படி அதே தேதி, அதே நேரம், அதே இடத்தில் வைத்து அதே சம்பவத்தின் போது, சாட்சி-2 க்கு சாதாரண காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச. பிரிவு 337 - ன் கீழும்,

2.3) மேற்படி அதே தேதி, அதே நேரம், அதே இடத்தில் வைத்து அதே சம்பவத்தின் போது, பால்ராஜ் (எ) பாலு என்பவருக்கு மரணத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச. பிரிவு 304(A) - ன் கீழும்,

2.4) மேற்படி அதே தேதி, அதே நேரம், அதே இடத்தில் வைத்து அதே சம்பவத்தின் போது, இருசக்கர வாகனம் ஓட்டுநர் உரிமம் இன்றி வாகனம் ஓட்டிய குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு 181(3) MV Act - ன் கீழும் தேவூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது. அதன் பின்பு குவிமுச பிரிவு 251-ன் கீழ் எதிரியிடம் இ.த.ச பிரிவு U/s. 279, 304(A), 337 of IPC, 181(3) MV Act - ன் கீழ் குற்றங்கள் பற்றி வினவ எதிரி குற்றங்களை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சாராம்சம் பின்வருமாறு** : -

4.1) அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 04 வருடத்திற்கு முன்பாக, காலை சுமார் 11.00 மணியளவில் தனது கணவர் பால்ராஜ், குமாரபாளையத்தில் உள்ள தனது மகள் வீட்டிற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வருவதற்காக குமாரபாளையம் to எடப்பாடி செல்லும் சாலையில் உள்ள புளியம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே அவருக்கு தெரிந்த நபரின் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்து கொண்டிருந்ததாகவும், எதிரே வந்த வண்டி மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் அவருக்கு தலையில் அடிப்பட்டதாக தகவல் சொன்னதாகவும், தான் தகவல் அறிந்து குமாரபாளையம் அரசு

மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது தன்னுடைய கணவர் இறந்துவிட்டதாக சொன்னதாகவும், அவரின் பிரேதம் பிணவறையில் இருந்ததாகவும், அவருக்கு பின் தலையில் அடிப்பட்டிருந்ததாகவும், இது சம்பந்தமாக தேவூர் காவல் நிலையத்தில் எழுத்துபூர்வமான புகார் (**அ.சா.ஆ.1**) கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

4.2) அ.சா.3 தனது சாட்சியத்தில், பார்வை மகஜரில் (**அ.சா.ஆ.2**) உள்ள **2**-வது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்று சாட்சியமளித்துள்ளார்.

4.3) அ.சா.4 திருமதி.தேவி, காவல் ஆய்வாளர் அவர்கள் தனது சாட்சியத்தில், கடந்த 2021 - ஆம் ஆண்டு சங்ககிரி வட்ட காவல் ஆய்வாளராக தான் பணியில் இருந்தபோது, கடந்த 02.11.2021ம் தேதி, காலை சுமார் 06.00 மணிக்கு தேவூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக திரு. முருகன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது, தேவூர் கிராமம், மேட்டுக்கடை, குடித்தெருவை சேர்ந்த பால்ராஜ் (எ) பாலுவின் மனைவி வள்ளி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரின் பேரில் தேவூர் காவல் நிலைய குற்ற எண்.220/2021, சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதச ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை (**அ.சா.ஆ.3**) பதிவு செய்ததாகவும்,

4. 4) பின்னர், அன்றைய தினமே, புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு காலை சுமார் 07.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ரவிச்சந்திரன் மற்றும் சீனிவாசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் (**அ.சா.ஆ.4**) வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் கையொப்பம் பெற்றதாகவும்,

4.5) பின்னர், அன்றைய தினமே குமாரபாளையம் அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன பால்ராஜ் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்பாக பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை **(அ.சா.ஆ.5)** தயார்செய்து, பின்னர் இறப்பிற்கான காரணம் அறிய பிரேத பரிசோதனை செய்ய வேண்டி விபத்தில் இறந்துபோன பால்ராஜ் என்பவரின் பிரேதத்தை தலைமை காவலர் திரு. ஞானசேகரன் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்ததாகவும்,

4.6) பின்னர் சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்து எதிரி ஆனந்தன், த/பெ.தங்கவேல் என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 24.11.2021 ஆம் தேதி, மாலை 04.00 மணிக்கு தேவூர் காவல் நிலையம் முன்பு வைத்து கைதுசெய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்ததாகவும்,

4. 7) பின்னர் கடந்த 26.01.2022 ஆம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன பால்ராஜ் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த குமாரபாளையம் அரசு மருத்துவமனையின் மருத்துவர் திருமதி.பிரீத்தா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து பிரேத பரிசோதனை அறிக்கை **(அ.சா.ஆ.6)** பெற்றதாகவும்,

4. 8) பின்னர், அன்றைய தினமே, எடப்பாடி செந்தில் மருத்துவமனை சென்று இவ்வழக்கு விபத்தில் அடிப்பட்ட அருணகிரி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.செந்தில்ராஜா என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்று **(அ.சா.ஆ.7, அ.சா.ஆ.8) -ஐ** பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும்,

4.9) பின்னர், காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என மருத்துவர் சான்று வழங்கியதாலும், எதிரி ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியதாலும் அன்றைய தினமே இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 304(A) இதச- பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A) இதச r/w 181(3) of MV ACT ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை **(அ.சா.ஆ.9)** கனம் நீதித்துறை நடுவர் எண்-1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும், அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A) இதச r/w 181(3) of MV ACT இதச- ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதிஅறிக்கை தயார்செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும்,

4.10) பின்னர், இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களை வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து, பின்னர், வாகனங்களை ஆய்வுசெய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சரவணபவன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து ஆய்வறிக்கைகளை **(அ.சா.ஆ.10, அ.சா.ஆ.11)** பெற்றதாகவும், சாட்சியமளித்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவடைந்த பிறகு எதிரிக்கு பாதகமாக தோன்றக் கூடிய அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)-ன் கீழ் தொகுத்து வினவிய போது எதிரி அதனை மறுத்தார். எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரிதரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

6. தற்பொழுது இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

7. அரசுதரப்பில் அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் குறியீடும் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகளான 3 முதல் 7, 9 முதல் 14 வரையானவர்களை அரசுதரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள். எதிரிதரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>**விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்**</u>:

8. இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

9. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அரசுதரப்பு தன் வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தண்டணை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. மாறாக எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில், விபத்தில் இறந்தவர் மதுபோதையில் வந்தார் என்றும், சம்பவ இடத்திற்கு அருகே இருந்த வேகத்தடையில் வாகனம் ஏறி இறங்கும் போது தவறி கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், அ.சா.2-ன் கவனக்குறைவால் தான்

இந்த விபத்து ஏற்பட்டது என்றும், எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கில் புகார்தாரர் சாட்சியாக அ.சா.1-ம், கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2-ம் பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.3-ம், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

12.1) எதிரி மீதான இதச U/s. 279, 304(A), 337 of IPC, 181(3) MV Act - ஆகிய பிரிவுகளின் கீழான குற்றம் குறித்து பரிசீலிக்கும்போது, அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 01.11.2021 -ம் தேதி மதியம் 11.45 மணி சுமாருக்கு தேவூர் காவல் நிலைய சரகம் குமாரபாளையம் to எடப்பாடி மெயின் ரோட்டில் புளியம்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் எதிரி TN 52 L 6122 என்ற பதிவெண்கொண்ட Hero splendor இருசக்கர வாகனத்தில் வாதியின் கணவர் பால்ராஜ் (எ) பாலு என்பவரை பின்னால் உட்கார வைத்து கொண்டு குமாரபாளையம் பக்கம் இருந்த எடப்பாடி நோக்கி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வலது புறமாக ஏறி ஓட்டிச்சென்று எதிர் திசையில் வந்த சாட்சி-2 அருணகிரி என்பவர் ஓட்டிவந்த TN 52 F 7732 என்ற பதிவெண்கொண்ட Honda Unicorn இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி, சாட்சி-2 அருணகிரி என்பவருக்கு சாதாரண காயத்தையும், பால்ராஜிற்கு மரணத்தை ஏற்படுத்தினார் என்பதாகும்.

12.2) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் கடந்த 01.11.2021 - ஆம் தேதி மதியம் 11.45 மணியளவில் தேவூர் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, குமாரபாளையம் to எடப்பாடி ரோட்டில் எதிரி ஆனந்தன் என்பவர் TN 52 L 6122 என்ற

பதிவெண்கொண்ட Hero splendor வாகனத்தில் பால்ராஜ் என்பவரை பின்னால் உட்காரவைத்துக்கொண்டு எடப்பாடி நோக்கி சென்றுள்ளதும், அப்போது விபத்து ஏற்பட்டுள்ளதும் நிரூபணமாகியுள்ளது.

12.3) இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக கடந்த 02.11.2021- ஆம் தேதி அ.சா.1 இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக தேவூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளது அ.சா.ஆ-1 மூலமும், மேற்படி புகாரின் பேரில் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதும், பின்னர் அன்றையதினமே சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் (அ.சா.ஆ.2) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) தயார்செய்துள்ளது அ.சா.4-ன் சாட்சியத்தின் மூலமும், இவ்வழக்கு விபத்தில் பால்ராஜ் என்பவர் இறந்துள்ளது அ.சா.ஆ-5 பிரேத விசாரணை அறிக்கை மற்றும் அ.சா.ஆ.6 பிரேத பரிசோதனை அறிக்கை மூலமும், வழக்கில் கண்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கைகள் (அ.சா.ஆ.10, அ.சா.ஆ-11) பெறப்பட்டுள்ளதும், இவ்வழக்கு விபத்தில் அருணகிரிக்கு என்பவருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.8 மூலமும், மேலும் அருணகிரி என்பவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என்பதால் அ.சா.ஆ.9 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார்செய்யப்பட்டுள்ளது அ.சா.4-ன் சாட்சியத்தின் மூலம் நிரூபணமாகியுள்ளது. மேலும் மேற்படி விபத்தானது இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்பது மேற்கண்ட வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் மூலம் நிரூபணமாகியுள்ளது.

12.4) மேற்படி விபத்தின் மூலம் பால்ராஜ் என்பவருக்கு மரணம் ஏற்பட்டுள்ளதும், அ.சா.2-க்கு சாதாரணகாயம் ஏற்பட்டுள்ளது நிரூபணமாகியுள்ள நிலையில், இவ்வழக்கு விபத்தை எதிரி மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று ஏற்படுத்தினாரா என்பது குறித்து பரிசீலிக்கும்போது, இவ்வழக்கின் புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில், தனது வீட்டுக்காரர் யார் வாகனத்தில் சென்றார் என்று தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார்.

12.5) இவ்வழக்கில் காயம்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 01.11.2021 ம் தேதி காலை சுமார் 11.45 மணியளவில் எடப்பாடியில் இருந்து குமாரபாளையம் நோக்கி தனது இருசக்கர வாகனத்தில் புளியம்பட்டி என்ற இடத்தில் சாலையின் இடதுபுறமாக சென்று கொண்டிருந்ததாகவும், எதிரே வந்த இருசக்கர வாகனம் வேகமாக வலதுபுறமாக ஏறி வந்து தன் இருசக்கரவாகனத்தின் மீது மோதிவிட்டதாகவும், பால்ராஜ் என்பவர் இறந்துவிட்டதாகவும், தன் மீது மோதிய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆனந்தன் என்று கூறியதாகவும், தான் முதலுதவி சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக பவானியில் உள்ள பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், விபத்து நடந்த சமயத்தில் தனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான் என்றும், விபத்து நடந்தவுடன் யார் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தார்கள் என்று தான்

கவனிக்கவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.2-ன் சாட்சியத்திலிருந்து எதிரி இருசக்கரவாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று பால்ராஜிற்கு மரத்தையும், அ.சா.2-க்கு சாதாரண காயத்தை ஏற்படுத்தினார் என்பது நிரூபணமாகவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12.6) எனவே மேற்படி பரிசீலனையிலிருந்து இவ்வழக்கின் புகார்தாரரின் கணவர் இறந்துவிட்ட நிலையிலும், காயம்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டிவந்தார்கள் என்று தான் கவனிக்கவில்லை என்று சாட்சியமளித்துள்ள நிலையிலும், வெளிநபர் யாரும் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரணை செய்யப்படாத நிலையிலும், உண்மையில் எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனம் ஓட்டிச்சென்று அருணகிரி என்பவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினாரா என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. மேற்படி சந்தேகத்தை தீர்க்கும் வகையில் அரசுதரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. எனவே எதிரிமீது அரசுதரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. இறுதியாக, எதிரி மீது சுமத்தப்பட்ட இதச. 279, 304(A), 337 of IPC, 181(3) MV Act – ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி அரசுதரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை

எதிரிக்கு அளித்து, எதிரியை இதச. 279, 304(A), 337 of IPC, 181(3) MV Act – ஆகிய பிரிவுகளின் படி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1) – ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. வழக்குச்சொத்து இல்லை.

எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

**இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்து, இன்று** 06.04.2026 - **ம் தேதி அவையறிய பகரப்பட்டது.**

SATHIYA S

Digitally signed by SATHIYA S
Date: 2026.04.06 18:42:04 -0100

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**சங்ககிரி.**

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| **அ.சா.1** | **வள்ளி, புகார்தாரர் சாட்சி** |
| **அ.சா.2** | **அருணகிரி, காயம்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சி** |
| **அ.சா.3** | **சீனிவாசன், பார்வை மகஜர் சாட்சி** |
| **அ.சா.4** | **திருமதி.தேவி, காவல் ஆய்வாளர்.** |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| **அ.சா.ஆ.1** | 02.11.2021 | **புகார்** |
| **அ.சா.ஆ.2** | 02.11.2021 | **பார்வை மகசர்** |
| **அ.சா.ஆ.3** | 02.11.2021 | **முதல் தகவல் அறிக்கை** |
| **அ.சா.ஆ.4** | 02.11.2021 | **மாதிரி வரைபடம்** |
| **அ.சா.ஆ.5** | 02.11.2021 | **பிரேத விசாரணை அறிக்கை** |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6 | 02.11.2021 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 01.11.2021 | அருணகிரி என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 01.11.2021 | அருணகிரி என்பவரின் காயசான்றிதழ் |
| அ.சா.ஆ.9 | 26.01.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. |
| அ.சா.ஆ.10 | 25.11.2021 | TN 52 L 6122 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் ஆய்வறிக்கை. |
| அ.சா.ஆ.11 | 25.11.2021 | TN 52 F 7732 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் ஆய்வறிக்கை. |

சான்றுப்பொருள் : இல்லை.

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

குறிப்புகள்:

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்துள்ளார்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

SATHIYA S
Digitally signed by SATHIYA S
Date: 2026.04.06 18:42:14 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.

JUDICIAL MAGISTRATE NO.I COURT, SANKARI
PRESENT: TMT.S.SATHIYA, B.A.,B.L.,
JUDICIAL MAGISTRATE NO.I, SANKARI

CASE SUMMARY

CC-34/2022, Cr.No. 220/2021, THEVOOR POLICE STATION
CNR.No.TNSA-09-000377-2022

| S.No | Particulars | Purpose |
|---|---|---|
| i | The period of remand of the accused | The accused was station bail |
| ii | The date of filing of the Complainant/Final report in the Court | 16.03.2022 |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 14.12.2022 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 317 of the Code | Petition filed by the petitioner/ Accused U/s.70(2) of Cr.P.C, and surrender petition, Advance hearing petition, Recall petition, for which numbers assigned as CMP.No.67/2025, 68/2025, 69/2025 dated: 22.01.2025 Petitions were allowed on 22.01.2025. |
| vi | Date of Examination in-chief and cross-examination of a witness | PW1 was Chief and cross examined on 23.07.2025. |
| | | PW2 was Chief and cross examined on 09.09.2025. |
| | | PW3 was Chief examined on 09.12.2025. |
| | | PW4 was Chief and cross examined on 26.03.2026. |
| vii | Date of examination of the accused under section 313 of the Code | 27.03.2026 |
| viii | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; | NIL |
| ix | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

SATHIYA S Digitally signed by SATHIYA S Date: 2026.04.06 18:42:34 -0100

Judicial Magistrate No.I,
Sankari

**JUDICIAL FORM NO. 61**

**(Rule 106 of Crl.R.P)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, SANKARI**

JUDGMENT IN CC.NO. 34/2022

Complainant : காவல் ஆய்வாளர், தேவூர் காவல்நிலையம்.

Accused : பிரபு

Offence : U/Sec. 279, 304(A), 337 of IPC, 181(3) MV Act

Finding : எதிரி இதச. 279, 304(A), 337 of IPC, 181(3) MV Act - ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

Sentence : எதிரியை குவிமுச பிரிவு. 255(1) - ன் கீழ் விடுதலைசெய்து தீர்ப்பளிக்கப்பட்டது.

| **Serial Number** | **Description of the accused** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Name** | **Father's Name** | **Caste or Religion** | **Occupation** | **Residence** | **Age** |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | ஆனந்தன் | தங்கவேல் | இந்து | - | 47, கோணகழுத்தனூர், காட்டுவளவு மைலம்பட்டி, தேவூர் கிராமம், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம். | 33 |

| **Date of** | | | | | | | **Explanation of delay** |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension of appearance | Released on bail | Commencement of trial | Close of trial | Sentence or order | |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 01.11.2021 | 02.11.2021 | 24.11.2021 | 24.11.2021 (Station bail) | 23.07.2025 | 26.03.2026 | 06.04.2026 | - |

SATHIYA S Digitally signed by SATHIYA S Date: 2026.04.06 18:42:42 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.